**தலைப்பு 203 – கிரிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கிரிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிரிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 ஏப்ரல் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஏப்ரல் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கிரிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளது.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய நிறுவனங்களினால் அறிவிக்கப்பட்ட நிறுவனங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 43,932,466 தொகைக்கான செலவு மீதியை மொத்தச் செலவுகளுடன் சீராக்கல் செய்ய முன்னர் பரீட்சை மீதி தயாரிக்கப்பட்டிருந்தமையால், நிதி செயலாற்றுகை கூற்று மற்றும் பரீட்சை மீதி இடையே அந்தத் தொகையினால் வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டன. | அபிவிருத்தி கருமங்கள் மற்றும் பல்வேறு நிருவாக செலவுகளுக்காக மாவட்ட செயலகங்களுக்கு மற்றும் பிரதேச செயலகங்களுக்கு ஏற்பாடுகள் மாற்றுதல் மற்றும் பெறுவனவு மேற்கொண்ட பின்னர் அந்த நிறுவனங்களின் செலவுகளின் பெறுமதி பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்டுள்ள செலவு மற்றும் நிதி செயலாற்றுகை கூற்றின் படி தேறிய செலவுகள் இடையே காணப்படும் வித்தியாசம் ஆக ரூபா 44,053,417 தொகை இனங் காணப்பட்டிருந்தது. | வித்தியாசங்களை இனங் கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் 03 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் ஒரு மூலதனச் செலவு விடயத்திற்காக பெற்றிருந்த ரூபா 31,697,250 இற்கான மொத்தத் தேறிய ஏற்பாடுகளும், 2021 ஆகஸ்ட் மாதம் வரை செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்த காரணத்தினால் 2021 ஆகஸ்ட் 28 திகதிய அரச செலவு மீளாய்வு தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி முடக்கி வைப்பதற்கு நேரிட்டிருந்தது. | வெளிநாட்டு பிரயாணங்கள் இடைநிறுத்தப்படல், கணக்கீட்டுத் தவறுகள், ஈடுபாட்டுப் பொறுப்புகள் ஏற்படுத்தியிருக்காத செயற்திட்டங்களை இடைநிறுத்தல், ஏற்பாடுகளை முடக்கி வைத்தல் ஆகிய காரணங்களினால் மொத்த தேறிய ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டன. | ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் உரிய கருமங்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் 07 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 03 மூலதனச் செலவு விடயங்களுக்காக தேவையான ரூபா 46,097,680 தொகைக்கான மொத்த ஏற்பாடுகளும் பெறப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை மொத்த ஏற்பாடுகளில் ரூபா 14,021,916 எனப்படும் 16 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையான வீச்சளவில் ஆன ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | எதிர் காலத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் உரிய கருமங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் உரிய கருமங்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும் என. |
| (இ) | 03 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் ஒரு மூலதனச் செலவு விடயத்திற்காக திட்டமிடப்பட்ட பெறுகைச் செலவை மிகைத்து 23 சதவீதம் முதல் 262 சதவீதம் வரையான வீச்சு ஒன்றில் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி பெறுகைத் திட்டம் தயாரித்தல் முறையான முகாமைத்துவத்துடன் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டன. | எதிர் காலத்தில் சிறந்த முகாமைத்துவத்துடன் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | திட்டங்கள் தயாரித்தல் சிறந்த முகாமைத்துவத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களை அணுகுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவு விடய இலக்கம் 1001 இன் கீழ் ஏற்பாடு சேமிப்பினை மிகைத்து ரூபா 7,109 இற்கான ஈடுபாட்டுப் பொறுப்பு மற்றும் பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது. | எதிர் காலத்தில் ஏற்பாடுகளை மிகைக்காமல் பொறுப்புக்களை அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்கள் மேற்கொள்ளக் கூடாது என. |
| (ஆ) | செலவு விடயங்கள் 1409 இன் கீழ் ஏற்பாடுகளின் சேமிப்பு ரூபா 988,704 தொகை எனினும், 2021 ஆகஸ்ட் 28 திகதிய அரச செலவுகள் மீளாய்வு தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி செலவுகளை முடக்கி வைத்த பின்னர் ஏற்பாடுகளின் சேமிப்பு ரூபா 162,703 ஆகும். மேற்கூறிய செலவு விடயத்தின் கீழ் வருட இறுதியில் உள்ளவாறு ஈடுபாட்டுப் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 177,589 தொகையாக இருந்தது. அதன்படி, ரூபா 14,886 இற்கான ஏற்பாடுகளை மிகைத்த பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது. | எதிர் காலத்தில் ஏற்பாடுகளை மிகைக்காமல் பொறுப்புக்களை அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்கள் மேற்கொள்ளக் கூடாது என. |

# 3 செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

மடுமாதா ஆலயத்தின் கடமை அலுவல்களுக்காக வரக்கூடிய திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களின் தங்குமிட வசதிக்காக யாத்திரிகைகள் இல்லம் ஒன்று நிர்மாணிப்பதன் முதல் கட்டத்திற்குரிய ரூபா 2,128,305 இற்கான தொகையொன்று மன்னார் மாவட்ட செயலாளரினால் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு செலுத்தியிருந்ததுடன், இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேற்கூறிய கட்டிடத்தின் முதல் கட்டம் தொடர்பாக மதிப்பீடொன்று வழங்குமாறு திணைக்களத்தின் பணிப்பாளரினால் 2016 ஜுன் 28 திகதி மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு மறுமொழியாக | இந்த யாத்திகர் இல்லம் நிர்மாணிக்கும் அலுவல்களை பூர்த்தி செய்வதற்காக மன்னார் மாவட்ட செயலகத்தினால் பல தடவைகள் மதிப்பீடு பெற்றுக்கொள்வதற்காக | செயற்திட்டத்திற்காக செலவிடப்படும் ஏற்பாடுகள் இலக்காகிய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக |

மன்னார் மாவட்ட செயலாளரினால் மதிப்பீடு மற்றும் அளவைத் தாள்கள் சமர்ப்பித்தல் 05 மாத கால தாமதத்தின் பின்னர் 2016 நவம்பர் 25 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2017 செப்தம்பர் 13 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 11 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஒப்பந்த வேலையின் முதலாம் கட்ட நிர்மாண அலுவல்கள் 2017 திசெம்பர் 23 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், மீதியான நிர்மாண வேலைகளுக்காக மதிப்பீடொன்று தயாரிக்கும் படி 2017 செப்தம்பர் 14 திகதி மாவட்ட செயலாளரினால் மாவட்ட பொறியியலாளருக்கு அறிவிக்கப்பட்டது. அதற்காக மாவட்ட செயலாளர் 2019 ஏப்ரல் 05 திகதி பதில் அனுப்பியிருந்ததுடன், அதுவரை தொடர் செயல் நடவடிக்கை ஏதும் மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டத்தின் முதலாம் கட்ட அலுவல்களுக்காக 2017 திசெம்பர் 08 திகதி வரை ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,128,305 இற்கான தொகையொன்று செலுத்தியிருந்த போதிலும், பலவீனமான தரக் கட்டுப்பாட்டின் காரணமாக ஒரு வருட உத்தரவாத காலம் முடிவடைவதற்கு முன்னர் தூண்களின் அடி வாரம் வெடிப்பு ஏற்பட்டிருந்ததால் மீதியாக உள்ள நிர்மாண வேலைகளுக்காக மதிப்பீடொன்று தயாரிக்க முடியாது எனவும், அதற்காக கட்டிட திணைக்களத்தின் உசாத்துணையினை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் மாவட்ட பொறியியலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கட்டிடத் திணைக்களத்தின் பிரதான பொறியியலாளரினால் நிர்மாண வேலை தூண்களின் அடிவாரம் (Column Footing) அவதானிக்கப்பட்டதெனவும், எழுத்துமூலம் மற்றும் வாய்மொழி மூலம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அதற்கான சிறந்த பதில் கிடைத்திருக்கவில்லை. 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது இந்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்வதற்காக திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தமையால் இந்த அபிவிருத்தி அலுவல்கள் ஸ்தம்பித்த நிலையில் காணப்பட்டது.

இலக்கம் 55/2145 மற்றும் 19/10/2019 திகதி வெளியிடப்பட்டிருந்த இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானியின் மூலம் மடுமாதா ஆலயம் புனித பூமியாக ஆக்கப்பட்டிருந்தது. அதன்படி, மடுமாதா ஆலயம் புனித பூமியாக ஆக்கப்பட்ட பின்னர் இந்தத் திணைக்களத்திற்கு அந்த ஆலயத்தின் அபிவிருத்தி அலுவல் சுதந்திரமான முறையில் மேற்கொள்ள முடியாது எனவும், அவ்வாறு அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்படின், செயற்பாட்டுக் குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டு அதன் மேற்பார்வையின் கீழ் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன், குறிப்பிட்ட அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், 2021.02.24 திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்டது. எனினும் கடந்த காலப் பகுதியில் நிலவிய கொரோனா தொற்று நிலைமை காரணமாக இந்த அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக செயற்பாட்டுக் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு முடியாத நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்தது. எனினும், எதிர் காலத்தில் செயற்பாட்டுக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்காத போதிலும், தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்துடன் சேர்ந்து 2023 ஆண்டில் வருடாந்த பாதீட்டு ஏற்பாடுகளின் மூலம் இந்த முறையான முகாமைத்துவம் ஒன்றுடன் ஈடுபடுத்தப்பட வேண்டும் என.

அளவீட்டுத் தாளில் 225mm வீதம் காட்டப்பட்டுள்ள தூண்களின் அடிவாரங்களின் அடர்த்தியின் அளவு சில அடிவாரங்கள் 100mm எனவும், சில அடிவாரங்கள் 60mm எனவும் அவதானிக்கப்பட்டதெனவும், அதன் காரணமாக கட்டிடத்தின் வலிமை தொடர்பாக தீர்மானிக்க முடியாது எனவும், அறிவிக்கப்பட்டிருந்ததுடன், மடு பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தரினால் தூண்களின் அடிவாரம் 255mm இற்கான அடர்த்தியை விடக் கூடிய அடர்த்தியை கொண்டிருந்தது என சான்றுபடுத்தப்பட்டிருந்தது.
அதன்படி, நிர்மாண வேலை தொடர்பாக முரண்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(உ) ஒப்பந்த வேலை ஏற்புக் கடிதத்தின் படி (Letter of Acceptance) ரூபா 96,000 தொகைக்கான செயலாற்றுகை பிணைப் பொறுப்பு (Performance Security) 2018 ஜனவரி 08 திகதியுடன் முடிவடைந்திருந்தது.
செயற்திட்டத்தின் செயற்திட்ட குறைபாடுகள் காணப்பட்ட போதிலும், மன்னார் மாவட்ட செயலாளர், மடு பிரதேச செயலாளர் அல்லது கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தினால் முறையான மேற்பார்வையொன்று மற்றும் தொடர் நடவடிக்கை மேற்கொண்டிருக்காததுடன், 2019 ஜனவரி 30 திகதி ரூபா 106,415 இற்கான தடுத்து வைத்தல் பணமும் விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 2.5 மில்லியனிற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த கட்டிடத்தின் நிர்மாண வேலையின் ஆரம்ப அலுவல்கள் 2017 திசெம்பர் 23 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், நிர்மாணிக்கப்பட்டிருந்த பகுதியில் காணப்பட்ட

யாத்திரிகர் இல்லத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்காக அடுத்த ஆண்டுகளின் போது உரிய நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படும் எனவும் மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறைபாடுகள் மற்றும் உத்தியொகத்தர்களிடையே ஒருங்கிணைப்பொன்று காணப்படாத காரணத்தினால் இடப் பரிசோதனை மேற்கொண்டிருந்த 2022 பெப்ரவரி 18 திகதி அளவிலும், கட்டிடத்தின் அடுத்த கட்ட நிர்மாண வேலை அலுவல்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. மேற்படி, ரூபா 2.5 மில்லியன் செலவு பலனற்ற செலவொன்றென அவதானிக்கப்பட்டது.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்டிருந்த 02 சாரதிப் பதவிகளில் ஒரு பதவி வெற்றிடமாக காணப்பட்டதனால் திணைக்களத்தில் காணப்பட்ட இரண்டு வாகனங்களில் ஒன்று 2020 ஜனவரி 28 திகதி முதல் செயற்படாது காணப்பட்டது. | இந்த சாரதி வெற்றிடம் தொடர்பாக பொது நிருவாகம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் PACIS மென்பொருள் நிகழ்ச்சித் திட்டத்தில் போலவே முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 2017/04 இன் படி ஒவ்வொரு காலண்டிலும் அனுப்பப்படுகின்ற பதவியணி அறிக்கை நாளதுவரை ஆக்கப்படுகின்றது. வெற்றிடங்களை நிரப்புதல் திணைக்களத்தின் அதிகார எல்லைக்கு அப்பாலுள்ள செயற்பாடொன்றென காணப்படுவதனால் இந்த வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |

### 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 செப்தம்பர் 12 திகதி விபத்துக்குள்ளாகிய NB 2558 இலக்கங் கொண்ட வாகனத்திற்கு | விபத்துடன் தொடர்புடைய அடுத்த தரப்பினரிடம் அத்தொகையை அறவீடு செய்வதற்கு சட்ட | பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு அல்லது |

| | | |
|---|---|---|
| ஏற்பட்டிருந்த ரூபா 137,707 இற்கான நட்டத்தை இதுவரை அறவீடு செய்திருக்காததுடன், பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |

**4 நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்வதற்காக தகைமையுடைய கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தின் கணக்காய்வு அலுவல்களுக்காக முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். | இந்த திணைக்களத்திற்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் என்ற பதவியொன்று காணப்படவில்லை எனவும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படும் கணக்காளர் பதவிக்காக நிரந்தர நியமனம் ஒன்றின்றி சுமார் 10 வருட காலம் வெற்றிடமாக காணப்படுகின்றதென அறிவிக்கின்றேன். | அதிகாரச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**5 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை 61 ஆக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உதவிப் பணிப்பாளர், கணக்காளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் 01 பதவி வீதம் 05 பதவிகள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 03 பதவிகளுக்குரிய 08 வெற்றிடங்கள் காணப்பட்டன. | இந்த வெற்றிடங்கள் தொடர்பாக அறிவிப்பதற்காக பொது நிருவாக, மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் PACIS மென்பொருள் தொடர்ச்சியாக நாளதுவரை ஆக்கப்படுவதுடன், காலாண்டு ரீதியாக அறிக்கைகள் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கும் அனுப்பப்படுகின்றது. இந்த வெற்றிடங்களை நிரப்புவது திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாலுள்ள செயற்பாடு ஒன்றாக காணப்படுவதனால் இந்த வெற்றிடத்தை விரைவாக நிரப்பி கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. |